பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 124** **நாள்: 27.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க.நகர் மண்டலம்,பேப்பர் மில்ஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகள் இன்று அகற்றப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–68, பேப்பர் மில்ஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி, மாநகராட்சி அதிகாரிகளால் இன்று (27.08.2019) காவல்துறை உதவியுடன் அகற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–68, பேப்பர் மில்ஸ் சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையின்படி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் வாயிலாக சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் நில அளவையாளர்கள் மூலமாக 10 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் தாக்கீது வழங்கப்பட்டது. தாக்கீது வழங்கப்பட்ட 10 ஆக்கிரமிப்பாளர்களில் 9 ஆக்கிரமிப்பாளர்கள் தாமாக முன்வந்து ஆக்கிரமிப்பை அகற்றி வருகின்றனர். மீதமுள்ள ஒரு ஆக்கிரமிப்பான தண்டுமாரியம்மன் கோவில் நிர்வாகிகள் ஆக்கிரமிப்பை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி, பேப்பர்மில்ஸ் சாலையில் சுமார் 250 சதுர அடி பரப்பளவுள்ள ஆக்கிரமிப்புகள் காவல்துறை உதவியுடன் பெருநகர சென்னை மாநகராட்சியால் இடித்து அகற்றப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**